# ஆணாதிக்கச் சிந்தனையும் படைப்பாளியின் எடுத்துரைப்பியலும்

# Patriarchal thinking and the creationist narrative

**முனைவர் த. சத்தியசீலன்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நவ இந்தியா, கோயம்புத்தூர் - 641 006.

**Dr T. Sathiyaseelan**, Assistant Professor, Department of Tamil, Sri Ramakrishna College Of Arts and Science (Autonumous), Nava India, Coimbatore – 641 006.

**DOI : 10.5281/zenodo.7567930**

## Absract

It can be seen that contemporary short stories are emerging as symbolizing the traditions of patriarchal thought. It is healthy that male creators are also writing works related to women's equality and women's rights. But there is little to deal with a writing style parallel to the feminist writing tradition. Writers with a narrow view of feminism as emphasizing sexual freedom are operating as creative geniuses in this society. In this way, this article sheds light on how Su. Venugopal's collection of short stories 'Kalavu Pogum Puravigal' has highlighted the tradition of patriarchal thinking by fictionalizing female characters.

## ஆய்வுச் சுருக்கம்

தற்காலச் சிறுகதைகள் ஆணாதிக்கச் சிந்தனை மரபுகளை அடையாளப்படுத்தும் விதமாக வெளிவந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. பெண் சமத்துவம், பெண் உரிமை சார்ந்த படைப்புகளை ஆண் படைப்பாளர்களும் எழுதி வருவது ஆரோக்கியமான ஒன்றாக உள்ளது. ஆனால் பெண்ணிய எழுத்து மரபிற்கு இணையான எழுத்து முறையை கையாள்வது குறைவு. பெண்ணியம் என்பது பாலியல் சுதந்திரத்தை வலியுறுத்துவது என்ற குறுகிய பார்வை கொண்ட எழுத்தாளர்கள் இச்சமூகத்தில் படைப்பு மேதமைகளாக இயங்கி வருகின்றனர். அவ்வகையில் சு. வேணுகோபால் அவர்களின் **'களவு போகும் புரவிகள்'** சிறுகதைத் தொகுப்பு, ஆணாதிக்கச் சிந்தனை மரபை எத்தன்மையில் எடுத்துரைத்துள்ளது பெண் கதாபாத்திரங்களைப் புனைந்து எவ்வாறு எடுத்துரைத்துள்ளது என்பதை இக்கட்டுரை வெளிச்சப்படுத்துகிறது.

**Keywords:** பெண்ணியம், ஆணாதிக்கம், படைப்பாளி, கதைசொல்லி, எடுத்துரைப்பியல்.

## பாலியல் தொழிலாளியின் அவல நிலை

புனைகதைகளைப் படைக்கும் படைப்பாளிகள் எதார்த்தத்தின் சாட்சியாய் இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு ஆணாதிக்க, சாதிய மனநிலையுடன் படைப்புகளைப் படைத்துவருவதைக் காணமுடிகிறது. சாதிய மனநிலை என்றால் தாழ்த்தப்பட்ட பெண்களைப் படைக்கும் போது அவர்கள் பாலியல் எண்ணம் கொண்டவர்களாக, ஆதிக்கச் சாதியின் ஆண்களுக்கு இசைந்து போகிறவர்களாகப் படைக்கின்றனர். அதேசமயம் ஆதிக்கச் சாதிப் பெண்களின் பாலியல் குறித்து பேசுவதில்லை.

ஆணாதிக்க மனநிலையில் படைக்கும்போது சமூகப் பண்பாட்டு செயல்பாடுகளுக்கு ஒத்தவர்களைச் சிறந்த பெண்ணாகவும் அதிலிருந்து மாறுபட்டு இயங்கும் பெண்களை ஒழுக்கங்கெட்டவர்களாகவும் படைத்து தனது படைப்புச் செயல்பாட்டில் பூரணத்துவம் அடைகின்றனர்.

அவ்வகையில், **'மீதமிருக்கும் கோதும் காற்று'** என்ற கதையில் காதலனால் கைவிடப்பட்ட பெண் பாலியல் தொழிலாளியாக மாறியிருக்கும் சூழலைப் பதிவு செய்கிறார். பெரும்பாலும் பாலியல் தொழிலாளி பெண்களைப் பதிவு செய்யும்போது காதலைத் தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றனர். குடும்பம், சமூகம் போன்ற வேறு எந்தக் காரணத்தையும் இவர்கள் கண்டுகொள்வதில்லை. இது ஒருவித சாதி, மத கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

'சுப்பம்மாள்' என்கிற 'சுகிர்தா' என்ற கதாபாத்திரத்தின்வழி பாலியல் தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகளை பதிவு செய்கிறார் படைப்பாளி. தான் பாலியல் தொழிலாளியாக இருந்தாலும் தனது வாழ்நாளில் ஒருவனுடனாவது சமூகம் மதிக்கின்ற வாழ்வை வாழவேண்டும் என்று வாழ்க்கையை நடத்திவருபவளாக சுகிர்தா கதாபாத்திரத்தை எடுத்துரைக்கிறார். இங்கு ஒழுக்க உடல் ஒழுக்கமற்ற உடல் என்ற கற்பிதத்திற்குள் புதைந்துகிடக்கும் சிந்தனையாளராக படைப்பாளி வெளிச்சப்படுகிறார்.

ஆண் சமூகம் பாலியல் தொழிலாளிகளை சித்ரவதைக்குள்ளாக்கும் செயல்பாட்டை நேரடிக்காட்சிபோல, எதார்த்தத்துடன் காட்சிப்படுத்துகிறார். பாலியல் தொழிலாளி என்றால் இந்த சமூகம் உடலை வைத்துப் பணம் சம்பாதிக்கும் கருவியாகத்தான் பார்க்கிறது. தனது இச்சையைப் போக்கிக்கொள்ள ஆண் சமூகம் பாலியல் தொழிலாளிகளை கூட்டு பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தும் போது அந்த பெண்ணின் மனநிலையானது,

**"ஒவ்வொருவனும் மேலே படுக்கும்போது யோனி உடலின் வேறுவேறு இடங்களில் இருக்கக்கூடாதா என்றிருந்தது" (மேலது, ப.25)**

என்ற எண்ணத்திற்குள் புதைந்து விடுவதை படைப்பாளி எடுத்துரைக்கிறார். உடல்மீது உணர்வற்ற காமம் இறந்த ஒரு பெண்ணின் சுயத்தில் எஞ்சிநிற்கும் சிந்தனையாக இதைக் காணமுடிகிறது.

பாலியல் தொழிலாளி என்றாலும் அவளைப் பெண்ணாக இந்த சமூகம் பார்க்க மறுக்கிறது. ஆண்களுக்கு அவள் ஒரு கருவி. அந்த கருவியை எப்படி வேண்டுமானாலும் அணுகலாம் என்பதை,

**"உதட்டிற்குத் தாவியபோது சுவாசம் உயிர் வேதனை. தம் பண்ணியதை விட்டு மூச்சை இழுத்தும் அடியாழம்வரை அவன் துர்நாற்றம்... குமட்டியது. உடலுக்;குள் நாற்றமா? நாற்றத்தைப் போர்த்தியிருக்கும் உடலா?" (மிதமிறுக்கும் கோதும் காற்று, ப.25)**

என்று எடுத்துரைக்கிறார். இது பெண்ணைப் பாலியல் குறியீடாக மட்டும் அணுகும் ஆணாதிக்கச் சிந்தனையாளர்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கூட்டு பலாத்காரத்திற்கு உட்படுத்தும்போது பாலியல் தொழிலாளி கதறுவதில்லை. ஆனால் அவளின் உடல் வலியால் கதறும். ஆண் உலகத்திற்கு அதன் வலியை உணர்தல் எளிதானதன்று என்பதை,

**"மலத்தில் விழுந்த ஈயாக யோனியில் புரண்டார்கள். நிமிர்ந்தபோது அடிவயிற்று வலி. பிராந்தியை நீட்டினார்கள். பிராந்தி அடித்தால் நாற்றம் தெரிவதில்லை." (மேலது, ப.25)**

என்று எடுத்துரைக்கிறார். உடல் வலியைப் போக்கிக்கொள்ள, உடல்மீதான நாற்றத்தைப் போக்கிக்கொள்ள போதைக்கு அடிமையாகின்றனர் பாலியல் தொழிலாளிகள் என்பதைப் புரிதலுக்குட்படுத்துகிறார்.

**பெண்ணியமும் ஆணாதிக்கச் சிந்தனையும்**

பெண்ணியம் பேசும் தாய், மகள் இருவரையும் மையப்படுத்தும் கதையாகச் 'சப்பைக்கட்டு' கதை அமைந்துள்ளது. ஆணாதிக்கக் கருத்தியலுக்கு எதிராகப் பேசும் பெண்களின் அக நிலையையும் புற நிலையையும் இக்கதை பேசுகிறது. ஒரு ஆண் புற உலகில் பெண்ணியம் பேசினாலும் தனது மனைவி, மகள், தாயிடம் ஆணாதிக்கச் சிந்தனையாளனாகவே இயக்கம் கொள்கிறான். அவனைப் பொருத்தவரை பெண்ணியம் என்பது பணம் கொடுக்காமல் தனது இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் கருவி.

பெண் என்பவள் சார்ந்து வாழும் உயிரி. தனித்து வாழுதல் சமூக ஒழுங்கிற்கு எதிரானது என்ற சிந்தனை சமூகத்தில் புரையோடியுள்ளது. தனித்து வாழும் பெண்ணை ஒழுக்கம் கெட்டவர்களாக, இழிந்தவளாக அடையாளப்படுத்தி மற்ற பெண்களை ஆண்களைச் சார்ந்து வாழும் உயிர்களாக வைத்திருக்கிறது ஆணாதிக்கச் சமூகம்.

சப்பைக்கட்டு கதை, ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட கதைசொல்லி வழியாகப் பயணிக்கிறது. பெண்ணியம் பேசும் பெண்ணுடன் நட்புறவு கொண்டிருக்கும் கதைசொல்லி தனது ஆணாதிக்கச் சிந்தனைகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறான் என்பதை வெளிச்சப்படுத்துகிறது.

காந்தாலட்சுமி அம்மாள் வயதான பெண். சமூகம் தீர்மாணித்து வைத்துள்ள பண்பாட்டு வளையத்திலிருந்து விடுபட்டு பெண் சுதந்திரம் பேசும் கதாபாத்திரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளாள். இவருடன் பணியாற்றும் கதைசொல்லி பெண் சுதந்திரம் என்பது ஆண்களுக்குச் சாதகமானது என்பதில் உறுதிபாடாய் இருப்பவர். இவர் பெண் சுதந்திரம் என்பதை பெண் உடல் சுதந்திரம் என்பதாகப் புரிந்துகொண்டிருப்பவர். அவர் காந்தாலட்சுமி அம்மாளின் உடலமைப்பை,

**"இடக்காலைக் தூக்கி கால்மேல் போட்டார். சேலை சுருண்டுகொண்டது. சிவந்த கால் வழவழப்பாகத் தெரிந்தது. உட்கார்ந்ததும் இடுப்புச்சதை தூக்கி நிறுத்தியது. வயதை மறைக்கும் இளமை ஜொலித்தது" (சப்பைக்கட்டு, ப. 31)**

என்று கதைசொல்லி அவளை நோக்குவதாக படைப்பாளி கதைசொல்லியின் வழியாக வர்ணிக்கிறார். பெண்கள் எவ்வளவு முன்னேறி வந்தாலும் அவர்களின் உடல் குறித்த

கண்ணோட்டத்தை ஆணாதிக்கச் சமூகம் முன்வைத்து அவர்களின் வாழ்வை வழிப்பறி செய்கின்றது.

அதேபோல், பெண்ணியம் பேசும் பெண்களின் வாழ்க்கை மிகுந்த இடர்பாடுகளுக்கு உள்ளானது என்பதையும் அவர்களின் குடும்பம் குறித்த இழிந்த கண்ணோட்டத்திற்குள் வைக்கப்பட்டிருப்பதையும் காந்தாலட்சுமியின் மகள் கீர்த்தனாவிற்குத் திருமணம் குறித்த உரையாடலில் வெளிப்படுகிறது.

**"கிருஷ்ணா, பொம்பள ராஜ்யம் பிடிச்ச குடும்பம்டா, ஆணாதிக்கமம் அது இதும்பாளுக. ஃபாரினிலிருந்து குதிச்சது மாதிரி பிகேவ் பண்ணுவாளுக. வேற நல்ல எடமா பாக்கலாம்." (மேலது, ப. 35)**

என்று கதைசொல்லி தனது நண்பன் மகன் கிருஷ்ணமூர்த்தியிடம் கூறுகிறார்.

இவ்வாறு தனது தோழி என்பதுகூட அவளை நுகர்வுப் பொருளாக நோக்கும் கதைசொல்லியின் ஆணாதிக்க மனநிலையைக் காட்டுகிறது. காந்தாலட்சுமியுடன் புணர்வில் ஈடுபடுவதாகக் கதைசொல்லி கனவு காண்கிறார். அதில் தன்னுடன் இருந்தது காந்தாலட்சுமியா? வேறு பெண்ணா? யாராக இருக்கும் என்பதில் மிகுந்த சந்தேகத்துடன் இருந்தார். இறுதியில் அந்தக் கனவுக்கு விடை கிடைக்கிறது.

**"திடுக்கென நேற்றைய கனவு நினைவுக்கு வந்தது. முதலில் காந்தா மாதிரிதான் இருந்தது. கனவு தொடர்பு அறுவதற்கு முன் தெளிவானது. படுக்கையில் கிடந்தது கீர்த்தனாதான்" (மேலது, ப.35)**

என்று எடுத்துரைக்கிறார். இதன்வழி ஆணாதிக்கச் சிந்தனையானது தனது மகள் வயது இருந்தாலும் பெண்ணியம் பேசும் பெண் என்றால் அவளை எளிமையாக நுகர்ந்து விடலாம் என்ற கண்ணோட்டம் கொண்டிருப்பதைக் கதை வெளிப்படுத்துகிறது. தனது தோழியின் மகள்மீதான கதைசொல்லியின் பாலியல் வக்கிரக் கண்ணோட்டத்தை இக்கதை மையப்படுத்தி ஆணாதிக்கத்தின் நுண்ணரசியலை, வக்கிர மனநிலையை வெளிச்சப்படுத்துகிறது.

இன்றைய சூழலில் பெண் சுதந்திரம், பெண் விடுதலை என்பதைத் தனக்குச் சாதகமாப் பயன்படுத்திக் கொண்டு ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை நுகர்வுப் பண்டமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. ஆணாதிக்கத்தின் நுண்ணதிகாரங்களை அடையாளங்கண்டு அதை உடைப்பது இன்றைய பெண்சமூகத்தின் ஆகப்பெரிய பணியாகும். சாதி, மத, இன, நிற அதிகாரங்களை உடைக்காமல் முக்கியமாக குடும்ப அதிகாரத்தைக் கட்டுடைக்காமல் பெண் சுதந்திரம் பேசும் ஆண் சமூகத்தை புரிந்து கொள்வது அவசியமானதாகும். மரபு மீறாத சிந்தனைகள் சலுகைகளை வழங்கி மரபுக்குள் அமுக்கி வைக்கும் என்பதை,

**"எல்லா பெண்களும் சுதந்திரமாக, சமத்துவமாக, சரிநிகர் சமானமாக, நீதியான வாழ்க்கை வாழ, ஆண்களுடனான அவர்களது உறவால் மட்டும் அவர்களுடைய வாழ்வும் பணியும் மதிப்பிடப்படுவதும் தீர்மானிக்கப்படுவதுமான செயல்கள் இல்லாமல் போகவேண்டும். அதாவது மகளாக, மனைவியாக, காதலியாக, என்று மட்டுமில்லாது சமூகஜீவியாக அவர்கள் வாழ வெளியும்**

**வாய்ப்பும் சுதந்திரமும் தேவை - அப்படி செய்யாமல் விட்டால் பெண்ணடிமைத்தனமும் சாதியடிமைத்தனமும் ஒன்றை மற்றொன்று காத்து நிற்கும்" (புதுவிசை, வ. கீதா, ப. 13)**
என்று வ. கீதா பெண் விடுதலை என்பது ஆணாதிக்கத்தை உடைப்பது மட்டுமல்ல அதில் வேரூன்றி விருச்சமாகியிருக்கும் சாதியத்தைக் கழுவறுப்பதில் உள்ளது என்பதைப் புரிதலுக்குட்படுத்துகிறார்.

**படைப்பாளியின் எடுத்துரைப்பியல்**

படைப்பு என்பது சமூகத்தின் வாழ்முறையை எடுத்துரைக்கும் ஒன்றாகும். அது வாசிப்பவரின் உணர்வுகளை உயிரோட்டமுள்ள ஒன்றாக வடிவமைக்கிறது. படைப்புகள் பெரும்பாலும் சமூக அவலங்களைப் பேசுவதை மையமிட்டுதான் இயங்குகின்றன. இந்த அவலங்களைத் தேர்ந்தெடுப்பதில் படைப்பாளியின் பங்கு கவனிக்கத்தக்கது. படைப்பாளியை பாதிக்காத எதையும் அவர் எழுதுவதில்லை. படைப்பாளர் பெரும்பாலும் இக்கருத்துடன் ஒத்துப்போகின்றனர். இவ்வாறு கூறிவிடுவது என்பது அறிவிற்கு அப்பாற்பட்டதுதான். இவர்கள் தேர்ந்தெடுத்த ஒன்றை எழுதுகிறார்கள். இத்தேர்வில் சார்புத் தன்மை இருக்கிறது. ஆதிக்க, அடிமை சிந்தனை உள்ளது. கலகக் குரல் உள்ளது. படைப்பு என்பது வெறுமனே எதார்த்தத்தை மட்டும் பிரதிபலிப்பதில்லை, படைப்பாளியின் உளவியலையும் அச்சேற்றுகிறது.

**"பிரதிகள் வெறுமனே சமூகத்தை எதிரொளிக்கின்றன அல்லது சமூகத்திலிருந்து தோன்றுகின்றன எனச் சொல்லிவிட முடியாது. எதார்த்தத்தைப் பிரதிகள் எதிரொளிக்கின்றன அல்லது எதார்த்தத்திலிருந்து தோன்றுகின்றன எனச் சொல்வதைக் காட்டிலும் புனைவுகள் மற்றும் கதையாடல்களின் மூலம் பிரதிகளில் எதார்த்தம் புதிதாகக் கட்டமைக்கப்படுகிறது எனச் சொல்வதே சரியாக இருக்கும். சமூக, கலாச்சார, கருத்தியல் மூலப்பொருட்களிலிருந்து இக்கட்டமைப்பு மேற்கொள்ளப்படுகிறது. எதிரே விரிந்து கிடக்கும் இந்த மூலப்பொருட்களிலிருந்து எவை எவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன, எப்படி இவை வரிசைப்படுத்தித் தொகுக்கப்படுகின்றன. எந்தெந்த வடிவங்களில், என்னென்ன கோணங்களில் இவை முன்வைக்கப்படுகின்றன என்பவற்றைப் பொறுத்து கட்டமைக்கப்படும் எதார்த்தங்கள் அமைகின்றன." (1994, பக். 4- 5)**
என்ற அ. மார்க்ஸின் கருத்துப்படி படைப்பாளர்கள் ஒரு எதார்த்தத்தைக் கட்டமைக்கிறார்கள். அவ்வகையில், இக்கதைகளில் கட்டமைந்திருக்கும் எதார்த்தத்தையும் படைப்பாளி கட்டமைக்கும் எதார்த்தத்தையும் காணவேண்டியுள்ளது.

இரண்டு கதைகளும் பெண்களின் வாழ்வியல் சூழல்களை எடுத்துரைக்கின்றன. இதில் படைப்பாளி எதார்த்தம் என்ற பெயரில் 'மீதமிருக்கும் கோதும் காற்று' கதையில் பாலியல் தொழிலாளியைப் பாலியல் பண்டமாக ஆணாதிக்கச் சமூகத்திற்குப் படையலிடுகிறார். பெண்மீது நிகழ்த்தப்படும் கூட்டு பாலியல் வன்முறை இலகுவானதாக வசகருக்குள் கடத்துகிறார். அவளிள் உடலை வலியின் துன்பத்தை விட அவளின் இருப்பை இரசிக்கச் செய்கிறார். ஆணாதிக்கத்தின் வல்லாதிக்கத்தை கேள்வி கேட்பதை விட, ஒரு ஆணின் மீது அவள் வசீகரித்து நிற்பதாய்,

**"ஆப்பிள் பழத்தை துடைத்து வைத்தது போல அவன் கன்னங்கள். ரொம்ப அழகாக இருந்தான்." (மீதமிருக்கும் கோதும் காற்று, ப. 24)**

என்று ஆணை அவள் இரசிப்பதாய் எடுத்துரைக்கிறார். ஒரு ஆணின் கண்ணோட்டத்தில் இக்கதை பயணித்து முடிவில் இம்மாதிரியான பெண்கள் நிர்கதியற்றவர்களாக சமூகத்தில் நிலைநிறுத்தப்படுவதைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

அதுபோல சப்பைக்கட்டு கதையில் ஆணாதிக்க மரபிற்கு எதிராகப் பயணிக்கும் பெண்களின் வாழ்வியலை சப்பைக்கட்டாகக் கட்டமைக்கிறார். இதில் கதைசொல்லியின் எண்ணவோட்டத்தைக் கட்டமைக்கும் படைப்பாளி, பெண்ணியம் பேசும் பெண்களின் வாழ்க்கையைப் பதிவுசெய்யும் அதேவேளையில் ஆணாதிக்கச் சிந்தனை மரபிற்கு, ஆணாதிக்கப் பொதுப்புத்திக்குத் தீணி போடுவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

களவு போகும் புரவிகள் சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள இவ்விரு கதைகளும் ஆணாதிக்கச் சமூகம் வரையறுத்து வைத்துள்ள சமூக ஒழுக்கங்களிலிருந்து விலகிய பெண்களைப் பற்றி பேசுகிறது. ஆணாதிக்கச் சிந்தனைகளால் வஞ்சிக்கப்படும் பெண்களை இக்கதை எடுத்துரைக்கிறது. எதார்த்தம் என்பது இக்கதையில் இடம்பெற்றிருந்தாலும் படைப்பாளியின் எடுத்துரைப்பியலானது ஆணாதிக்கச் சார்புத்தன்மையுடன் இயங்குவதையும் காணமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்:**

1. **கீதா, வ.**, சாதி, தலித்துகள், பெண்கள்: மாறி வரும் சமுதாய உறவுகளும் மாறாத வன்மமும். புதுவிசை. காலாண்டிதழ், இதழ் 39, பக். 13-26, செப்டம்பர் 2013,.
2. **மார்க்ஸ், அ.**, உடைபடும் மௌனங்கள். (முதல் பதிப்பு), விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 1994.
3. **வேணுகோபால், சு.**,. களவு போகும் புரவிகள். (இரண்டாம் பதிப்பு), தமிழினி, சென்னை, 2012.

**Referenes**

1. Geetha V, Sathi, Dalit, Pengal: Marivarum Samuthaya Uravugalum Maratha Vanmamum, Puthuvisai, Journal, Issue 39, P13-26, Sep 2013
2. Marks A Udaipadum Mounangal, Vidiyal Pathippagam, Coimbatore, 1994.
3. Venugopal S, Kalavu pogum puravigal, Thamizhini, Chennai, 2012

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சத்தியசீலன். த " ஆணாதிக்கச் சிந்தனையும் படைப்பாளியின் எடுத்துரைப்பியலும்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 1, சனவரி 2023, பக். 12-17

**Cite this Article in English**

**Sathiyaseelan T " Patriarchal thinking and the creationist narrative"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 1, January 2023, pp. 12-17